**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 59 of 2022**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 12.08.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி.பாரதி | Father Name | : | திரு.கதிரேசன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused A1-A4 Present.**

**முதல் விசாரணை:**

புகார் கொடுக்கும்போது நான் கீழ்பூங்குருதி என்ற கிராமத்தில் குடியிருந்து வந்தேன். என் கணவர் பெயர் கதிரேசன் , நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஒரே குழந்தை , குழந்தை பெயர் குகசிம்மன் , எனக்கு வீட்டுகாரருக்கும் சண்டை . கல்யாணமாகி ஒரு வருடம் நன்றாக இருந்தோம். எனக்கு குழந்தை பிறந்தது . அதன்பின்பு என் வீட்டுகாரருக்கு சந்தேகம் அதனால் எங்களுக்குள் சண்டை . குழந்தை பிறந்த 1 1/2 வருடம் கழித்து நான் என் அம்மா வீட்டிற்கு போய்விட்டேன். மறுபடியும் குழந்தையை விட்டுவிட்டு இருக்க முடியாது காரணத்தினால் நான் பர்கூர் மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் வேண்டும் , குழந்தை வேண்டும் , நான் வாழ வேண்டும் என்று புகார் கொடுத்தேன்.

(2) எல்லோரும் பேசி என் வீட்டுகாரர் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்கள் . போனவுடன் ஒரு 2 மணிநேரம் கூடயில்லை என் வீட்டுகாரர் என்னை அடித்தார். அடித்துவிட்டு குழந்தையை என்னிடம் கொடுக்கவில்லை,

அவர்களை வைத்துக்கொண்டார்கள் . இந்த விஷியம் நடந்தது 2019 வருடமாகும். அதன்பிறகு நான் என் அம்மா வீட்டுக்கு போய்விட்டேன் . 2 வருடமாக பிரிந்து தான் இருந்தேன் . அந்த சமயத்தில் ரகுபதி என்பவர் எனக்கு பழக்கம் , ரகுபதியும் நானும் , ஈரோட்டிலுள்ள எலமுத்தூர் கம்பெனியில் ஒன்றாக வேலை செய்தோம் . என் கணவர் ரகுபதிக்கு போன் செய்து அவளை அனுப்பிவிடு இல்லை என்றால் உன்னை எதாவது பண்ணிவிடுவேன் என்று சொன்னார் , நான் போகமாட்டேன் என்று சொன்னேன், ரகுபதி என்னை அடித்துவிட்டார், அதன்பிறகு என் வீட்டுகாரர் என்னிடம் பேசி என்னை அவர் வீட்டிற்கு அழைத்துப்போனார் . எதுவும் சொல்லமாட்டேன், எதுவும் கேட்கமாட்டேன் என்று சொல்லி அழைத்துச்சென்றார். மறுபடியும் என்னை அங்க போனயில்ல , இங்க போனயில்ல என்று கேட்க ஆரம்பித்தார் . அதன்பிறகு நான் குழந்தை எடுத்துக்கொண்டு ரகு வேலை செய்யும் பேரண்டப்பள்ளிக்கு வந்துவிட்டேன்.

**(3)** நான் வந்த பிறகு 01 தேதி, 10 மாதம், 2021ல் பர்கூர் காவல் நிலையத்தில் இருந்து வந்து என்னை கூப்பிட்டுக்கொண்டு போனார்கள் , என் வீட்டுகாரர் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் என்னை அழைத்துப்போனார்கள் . பர்கூர் காவல் நிலையத்தில் என்னிடம் இருந்து குழந்தை வாங்கிக்கொண்டு , அதன்பிறகு என் கணவருடன் வாழ மாட்டேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அவங்க ஊர் பொதுமக்கள் , எங்கள் ஊர் பொதுமக்கள் பேசவேண்டும் என்று 04 தேதி, 10 மாதம் 2021 ல் சொன்னார்கள். நான் , ரகுபதி, ரகுபதிவுடன் வேலை செய்யும் மற்றொரு

ரகுபதி, திம்மராயன், நந்தகுமார் சக்திவேல் ஆகிய 6 பேரும் பர்கூர் காவல் நிலையத்திற்கு முன்புறம் சென்றிருந்தோம் . அப்போது காலை 11.00 மணியிருக்கும். போலீஸ் ஸ்டேசன்அருகே வைத்து பேசிக்கொண்டியிருந்தபோதே சதிஷ் என்பவர் ரகுபதியை அடிக்கவந்தார் , அங்குயிருந்த எல்லோரும் தடுத்துவிட்டார்கள் . என் வீட்டுகாரர் கோர்ட் மூலம் டிவோர்ஸ் வேண்டும் கேட்க நான் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு புறப்பட்டோம் . நாங்கள் டாடா வண்டியில் அங்க இருந்து சூளகிரிக்கு போனோம். பயணப்பள்ளி சாய் சரவணா ஓட்டல் அருகே எங்கள் வண்டி போய்கொண்டிருந்தபோது நான்கு பேர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். காரை நிறுத்தச்சொல்லி காரின் கண்ணாடிகளை உடைத்தார்கள் . அந்த இருசக்கர வாகனத்தில் நபர்கள் கதிரேசன் , கேசவன் , பாண்டுரங்கன், சதிஷ் ஆவார்கள் . கெட்ட கெட்ட வார்த்தைகளை பேசி வண்டியில் இருந்து இறங்க சொன்னார்கள்.

(4) கதிரேசன் , சதிஷ் ஆகியோர் கையில் இரும்பு ராடு வைத்திருந்தார்கள். வண்டியில் இருந்த அனைவரும் இறங்கினோம் . அப்போது கதிரேசன் மற்றும் சதிஷ் ஆகியோர் ரகுபதியை இரும்பு ராடால் தலையின் முன்பகுதியிலும், தலையின் பின்பகுதியிலும் அடித்தார்கள். அதை தடுக்கவந்த திம்மராயன் என்பவரையும் தலையில் ராடால் அடித்துவிட்டார்கள். என் கணவர் கதிரேசன் என் கன்னத்தில் கையால் அடித்து என் கழுத்தை நெறித்தார் , என்னை கீழே கதிரேசன் தள்ளிவிட்டார் . நாங்கள் சத்தம் போடவே ஓட்டலில் இருந்த நபர்கள் மற்றும் பக்கம் அக்கம் இருந்த நபர்கள் ஓடி வந்தவுடன் இரண்டு இருச்சக்கர வாகனங்களில் அந்த

இடத்தில் இருந்து ஓடிவிட்டார்கள் . ரகுபதி அடித்தவுடன் கீழே சுருண்டு விழுந்துவிட்டார். அவருக்கு உயிரில்லை . இந்த சம்பவம் மதியம் 1.45 மணிக்கு நடந்தது . அக்கம் , பக்கம் இருந்தவர்கள் எல்லாம் அந்த பையன் இறந்துவிட்டான் நீங்கள் கேஸ் கொடுங்கள் என்று சொன்னார்கள் . அங்கு இருந்து ஆட்டோ பிடித்து போலீஸ் ஸ்டேசன் போய் நான் புகார் கொடுத்தேன் .

(5) எனக்கு எழுதப்படிக்க வராது நான் சொல்ல சொல்ல அங்கு இருந்து இன்னொரு நபர் எழுதி அதில் நான் கையெழுத்து போட்டேன் . ஆனால் நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் . புகார் **அ.த.சா.ஆ.**1 ஆகும். ஆஜரில் இருக்கும் முதலில் நிற்கும் நபர் என் கணவர் கதிரேசன் , அடுத்து நிற்பவர் கேசவன், அதற்கு அடுத்து நிற்பவர் சதிஷ் , அப்பறம் பாண்டுரங்கன் ஆவார்கள். சம்பவ சமயத்தில் ஆஜரிலிருக்கும் நான்கு எதிரிகள் தான அங்கு வந்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்பு ராடு கொண்டு தான் அன்றைய தினம் ரகுபதி தாக்கப்பட்டார் , மற்றொரு இரும்பு ராடு சதிஷ் என்பவர் உபயோகப்படுத்தினார். அந்த பெரிய இரும்பு ராடு **Mo.1**, அந்த சின்ன இரும்பு ராடு **Mo.2** ஆகும். புகாரை நான் 4 ம் தேதி, 10 வது மாதம், 2021 வருடம், சாயங்காலம் 3.00 மணிக்கு கொடுத்தேன் . இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN